# வளர் தமிழ் ஆய்வு

யாதும் ஊரே
யாவரும் கேளிர்

பதிப்பாசிரியர்கள்

**சி. மைக்கேல் சரோஜினி பாய்**

**ப. பத்மநாப பிள்ளை**

**வ. இராசரத்தினம்**

வளர் தமிழ் ஆய்வு மன்றம்

திண்டுக்கல்

**2017**

**ISBN NO : 978-81-920884-6-4**

| | | |
|---|---|---|
| நூற்பெயர் | : | வளர் தமிழ் ஆய்வு<br>(கட்டுரைத் தொகுப்பு) |
| பதிப்பாசிரியர்கள் | : | சி. மைக்கேல் சரோஜினி பா<br>ப. பத்மநாப பிள்ளை<br>வ. இராசரத்தினம் |
| முதற் பதிப்பு | : | மே 2017 |
| தாள் | : | 18.6 மேப் லித்தோ |
| அளவு | : | டெம்மி |
| அச்சுரு | : | அகராதி 10 புள்ளி |
| பக்கம் | : | x+350 |
| விலை | : | ரூபாய் 500/- |
| அச்சகம் | : | சூர்யா பிரிண்ட் சொலூசன்ஸ்<br>சிவகாசி |
| உரிமை | : | பதிப்பாசிரியர்களுக்கு |
| வெளியீடு | : | வளர் தமிழ் ஆய்வு மன்றம்<br>பூங்குன்றன் பள்ளி வளாகம்<br>விவேகானந்தா நகர்<br>திண்டுக்கல் - 624 001<br>தமிழ்நாடு<br>தொ.பே. 0451-2427458 |

# உள்ளே...


| | | |
|---|---|---|
| 1. | சு. அஞ்சுகம்<br>ஜீவகுமாரனின் கடவுச்சீட்டும் கலாச்சார மாற்றமும் | 1 |
| 2. | த. அபிநயா<br>தமிழ் மெல்லெழுத்துக்களின் வருகையும் வரன்முறையும் | 6 |
| 3. | த. அமலா<br>இடையிட்ட மாதவிலக்கும் மரபு மருத்துவ முறைகளும் | 11 |
| 4. | நா. அம்பிகா<br>பதினெண்கீழ்க்கணக்கு அகநூற்களில் இடையியல் | 16 |
| 5. | கி. அய்யப்பன்<br>இடக்கை நாவலில் திருநங்கை சித்திரிப்பு | 21 |
| 6. | ச. அல்போன்ஸ்மேரி<br>வேதாத்திரியாரின் திருக்குறள் காந்த தத்துவ மறைபொருள் விளக்கம் | 26 |
| 7. | நயம்பு.அறிவுடைநம்பி<br>நன்னூல் உரையில் திருக்குறள் மேற்கோள் | 31 |
| 8. | பூ.மு. அன்புசிவா<br>சல்மாவின் கவிதைகளில் பெண் மொழியும் பெண் இருப்பும் | 36 |
| 9. | மா.போ. ஆனந்தி<br>நந்தியாவட்டத்தில் சடங்குகளும் நம்பிக்கைகளும் | 41 |
| 10. | டே. ஆனி மரிய ஜான்சி<br>சங்க கால மனித உறவு | 46 |
| 11. | வ. இராசரத்தினம்<br>கெடுப்பதூஉம் - பெய்து கெடுப்பதா? பெய்யாமல் கெடுப்பதா? | 51 |
| 12. | அ. இராஜ்குமார்<br>சமுதாய நீதி கூறும் கல்வி | 56 |
| 13. | கா. இலட்சுமி<br>தமிழ் மொழி வளர்ச்சியில் புலனத்தின் பங்களிப்பு | 59 |

# சங்க கால மனித உறவு

மனிதன் ஒரு சமூக விலங்கு. பிறரைச் சார்ந்தே வாழப் பழக்கப்பட்டவன். உறவு என்பது மனிதனது வாழ்விலே மிக முக்கியப் பங்கு வகிக்கிறது. ஒருவன் பிறரோடு கொண்ட உறவானது, இரத்த உறவாகவோ, மண உறவாகவோ அல்லது வேறு உறவாகவோ அமையும். மனிதன் மனிதனோடு மட்டுமல்லாது கடவுளோடும், இயற்கையோடும் உறவு கொண்டவனாகக் காணப்படுகின்றான்.

**கடவுள் - மனிதன் உறவு**

இயற்கையைக் கண்டு அச்சம் கொண்ட மனிதன், தன்னை மீறிய சக்தி ஒன்று உண்டு என எண்ணினான். அதனைத் தெய்வமாக வழிபடத் தொடங்கினான். அத்தெய்வத்தின் மனதைக் குளிர்வித்தால், தனக்கு எந்தப் பாதிப்பும் நேரிடாது என நம்பினான். அதன் விளைவாக, பல்வேறு சடங்குகளையும், சம்பிரதாயங்களையும் உருவாக்கி வழிபடத் தொடங்கினான். அந்தந்தச் சூழலுக்கு ஏற்ப, பல்வேறு திருவிழாக்களைக் கொண்டாடத் தொடங்கினான். தனது வாழ்க்கையில் நேரக்கூடிய அனைத்தையும் கடவுளோடு தொடர்புபடுத்திக் காணத் தலைப்பட்டான்.

"நூல் அறி புலவர் நுண்ணிதின் கயிறு இட்டு,
தேஎம் கொண்டு, தெய்வம் நோக்கி,
பெரும்பெயர் மன்னர்க்கு ஒப்ப மனை வகுத்து"

(நெடுநல்வாடை : 76 - 78)

இவ்வாறு, எந்த ஒரு செயலையும் செய்யத் தொடங்குவதற்கு முன்பாகவும் கடவுளை வழிபட்டு செய்யத் தொடங்கினர். அதுமட்டுமல்லாது, நாள் தவறாமல் தினமும் தெய்வ வழிபாடு நடத்தினர்.

"மடவரல் மகளிர் பிடகைப் பெய்த
செவ்வி அரும்பின் பைங்கால் பித்திகத்து,
அவ்இதழ் அவிழ் பதம் கமழ், பொழுது அறிந்து,
இரும்பு செய் விளக்கின் ஈர்ந்திரி கொளீஇ,
நெல்லும் மலரும் தூஉய், கை தொழுது,
மல்லல் ஆவணம் மாலை அயர" (நெடுநல்வாடை : 39 - 44)

என நெடுநல்வாடை பெண்களின் மாலை நேர வழிபாட்டைச் சுட்டுகிறது. இவ்வாறு கடவுளோடு நெருங்கிய உறவு கொண்டவர்களாக சங்கத்தமிழர் திகழ்ந்தனர்.

---

**டே.ஆனி மரிய ஜான்சி**

பாத்திமா கல்லூரி, மதுரை.